# கம்பனும் வேதாத்திரியமும்

(காலத்தை வென்ற கவிஞர்கள்)

பானுகுமார் படைப்புலகம்



www.banukumar.in

# கம்பனும் வேதாத்திரியமும்

(காலத்தை வென்ற கவிஞர்கள்)

## இலக்கிய திறனும் கருத்தியலும்


அருள்நிதி

மன்னார்குடி பானுகுமார்


1. இலக்கிய திறனாய்வு
2. நடை நடை
3. எதுகை
4. சீர் எதுவை
5. மோனை நலன்
6. கம்பர் தரும் மோனை நலன்
7. வண்ணம் வண்ணம்
8. இயைபு இயைபு
9. முரண் முரண்
10. நாடும் அரசும்
11. சிறந்த ஆட்சி
12. இறைச்சிந்தனைகள்
13. மானுடம் வென்றதம்மா!
14. மனித நேய தோற்றம்
15. மனித நேயமும் கம்பனும்
16. மனித நேயமும் மகரிஷியும்

கவிதை - ஓர் அரிய கலை.நுண்ணிய கலை.கவிதையை யாத்த கவிஞனின் உணர்ச்சியை அதைப் படிப்போரிடமும் உண்டாக்கவல்ல அற்புத சாதனம்.

கவிதையனுபவம்.அது கூறும் பொருளில் இல்லை.கூறும் முறையில் தான் இருக்கிறது.

கவிஞன் தான் பெற்ற உணர்ச்சிகளைத் தன் கவிதைகளைப் படிப்போரும் பெற வேண்டும் என்று எண்ணிச் சில யுக்தி முறைகளைக் கையாண்டு கவிதையைப் படைக்கிறான்.

அந்த யுக்தி முறைகளால் உணர்ச்சியை அதில் பொதிய வைக்கிறான்.

கற்பனை,சொற்களின் அமைப்பு முறை,ஒலி நயம்,யாப்பு முறை, அணி நலன்,தொடை நயம்,குறிப்புப் பொருள் ,சுவைகள் போன்ற சில முறைகளை மேற்கொண்டு கவிதையைப் படைக்கிறான்.

கவிதையைப் படிக்க வேண்டிய முறையில் இவை தோன்றுமாறு படித்தால் கவிஞன் பெற்ற அனுபவத்தையே நாமும் பெறுகிறோம்.

கவிஞன் மேற்கொள்ளும் யுக்தி முறைகளையெல்லாம் ஓரளவு விளக்கமாக எடுத்தியம்புவது கவிதையின் சிறப்பு.

ஒரு மொழியின் அமைப்பினையும் அதன் பயன்பாட்டினையும், உணர்ச்சிக் கூறுகளையும் ஆழமான கருத்துகளையும் நடையியல் உத்திகளின் துணைகொண்டு விளக்குவதே மொழி நடை என்படும்.

இலக்கியங்கள் உலக மகா காவியங்கள் எனப் போற்றப்படுவதற்குப் பல காரணங்கள் உண்டு. எனினும் அதற்கு அவ்விலக்கியங்களை எழுதிய படைப்பாளிகளின் மொழிநடையும் ஒரு காரணமாகும்.

படைப்பாளியின் மொழி ஆளுமை அவ்விலக்கியங்களின் மொழி நடையில் வெளிப்படுவதால்தான் வள்ளுவரின் நடை, திருமூலரின் நடை, மாணிக்கவாசகரின் நடை, வள்ளலாரின் நடை, பாரதியின் நடை, வேதாத்திரி மகரிஷியின் நடை, சேக்ஸ்பியரின் நடை, மில்டனின் நடை, வேர்ட்ஸ் வொர்த்தின் நடை என படைப்பாளிகளின் பெயரால் நடையழகு போற்றப்படுகின்றது.

உலக மகா காப்பியங்களின் வரிசையிலே வைத்து எண்ணத்தக்கவற்றில் கம்பனின் கம்பராமாயணமும் ஒன்றாகும்.

ஆன்மீகத்தை அறிவியல் பார்வையில் மானுடத்திற்கு கொண்டு சென்ற  இலக்கியங்களில் வேதாத்திரியமும் ஒன்றாகும்.

வால்மீகி இராமாயணத்தின் வழி நூலாக அமைந்த போதும் கம்பன் தான் எழுதிய இராமகாதையை தமிழ்நாட்டுப் பழக்க வழக்கங்களுக்கும் பண்பாடுகளுக்கும் ஏற்ற வகையில் மாற்றியமைத்து தமிழ் மக்கள் அனைவரும் விரும்பிச் சுவைக்கும் வண்ணம் படைத்துள்ளார்.

வாழையடி வாழையாக வந்த பல மகான்களின் வரிசையில் வந்த வேதாத்திரி மகரிஷியின் வேதாத்திரியத்தில் மானுடத்திற்குத் தேவையான பண்பாட்டு கூறுகளை சமுதாயம் விரும்பிச் சுவைக்கும் வண்ணம் படைத்துள்ளார்.

கம்பர்,  மக்கள் வாழ்வை நெறிப்படுத்தக்கூடிய சிறந்த நீதிகளையும் கதைப் போக்கில் சுட்டிச் செல்கின்றார்.

வேதாத்திரியோ மானுடத்தை நெறிப்படுத்தக் கூடிய அறத்தையும் இறையுணர்வையும் நீதிகளையும் கவிகளாகவும் உரைநடைகளாகவும் உரைகளாகவும் சொல்லி வழிநடத்துகிறார்

.




கம்பரும் வேதாத்திரியமும் “சொல்லுக்குள் வாக்கியத்தைச்

சுருக்கி வைத்த கவிப்புலவர்கள்” “சூத்திரம் போல் பாட்டெழுதும் சுகக்கவிஞர்கள்”

கம்பனையும் வள்ளுவனையும் இளங்கோவடிகளையும் அவர்கள் தமிழ் மொழிக்கு இறவாப் புகழுடைய இலக்கியங்களைத் தந்தமைக்காகப் பாரதியும் போற்றுகிறார்.

கம்பனின் கவிதைகளும் வேதாத்திரியத்தில் கவிதைகளும் கற்பாரைப் பெரிதும் கவர வல்லனவாகும்.

காலத்தைக் கடந்து இன்றளவும் சிறப்புப் பெற்று விளங்குவதற்குக் காரணம் என்ன? இராமகவிதையின் மற்றும் வேதாத்திரிய கவிதையின் கருவும் உருவுமேயாகும்.

இலக்கியங்கள் கூறவந்த கருத்துகளால் மட்டுமின்றி அக்கருத்துகளைத் கூறும் திறத்தாலும் அவை உயிர் பெற்று விளங்குகின்றன.

அந்த வகையில் கம்பரும் வேதாத்திரியமும் தம் இலக்கியங்களை எவ்வாறான நடையில் வெளிப்படுத்துகிறார்கள் என்பதை காண்போம்

## நடை நடை நடை

நடை என்பதற்குப் பல்வேறு அறிஞர்கள் விளக்கங்களை அளித்துள்ளனர். கம்பரும் சிறந்த பாட்டு எப்படி இருக்க வேண்டும் என்பதை விளக்கியுள்ளார்.

"புவியனுக்கணியாய் ஆன்ற பொருள் தந்து புலத்திற்றாகி
அவியகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறிய ளாவுச்
சிவியுறத் தெளிந்து தண்ணென்று ஒழுக்கமும் தழுவுச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார்."
(ஆரண்ய காண்டம், சூர்ப்ப.1)

மஞ்சு சூழ்ந்த மலையிடைப் பிறந்து பஞ்சவடித் தலத்தை அழகு செய்து நடந்த கோதாவரி ஆறு சான்றோர். கவிபோல் விளங்கிற்று என்று கம்பர் கூறுகிறார்.

ஆன்ற பெருமை வாய்ந்த கோதாவரி ஆறு சான்றோர் கவிபோல் விளங்கிற்று என்று கம்பன் அமைத்த உவமையின் அழகினை ஆராய்ந்தறிந்தால் எக்காலும் எல்லோருக்கும் இன்பம் பயப்பதாகும்.

கல்லிடைப் பிறக்கும் கோதாவரியும் கவிஞர் **நாவிற் பிறக்கும் நற்கவியும் புவியினுக்கணியாய்ப் பொருந்தித் திகழ்வன என்றும் ஆன்ற பொருள் தரும் அருமை வாய்ந்தன என்றும் அரியத்**

**துறைகளைத் தாங்கி ஐந்திணை நெறியளாவிச் செல்வன என்றும் கவியுறத் தெளிந்து சீரிய ஒழுக்கம் தழுவிச் செல்லும் தகையன என்றும் கூறுகிறார்.**

இதன் வழி கம்பர் அணி நயம், ஆழ்ந்த பொருட் சிறப்பு, அகப்பொருள் துறைகள், ஐந்திணை வருணனை முதலியன அமைத்து தெளிவும் குளிர்ந்த ஒழுக்கமும் உடையதாக விளங்குவதே பாட்டு என்கிறார்.

"உரிய சொற்கள் உரிய இடங்களில் பொருந்தி நடப்பதே நடை. மொழியில் அழுத்தத்தையும் தெளிவையும் உருவாக்க முயலும் எல்லா வழிவகைகளையும் மொழிநடையியலின் கீழ் அடக்கலாம்.

இவற்றில் எல்லா மொழிகளிலும் பழமையான மொழியில் கூட ஊடுருவிச் செல்லும் உருவகங்களும் எல்லா அணி உருவகங்களும் சொற்றொடர் அமைப்பும் அடங்கும்.

அடுக்கு நிலை, நிறைவு, உயர்வு நவிற்சி, உச்சநிலை என்றினை உருவகங்களை அழகிய நடைக்குரியவை என ரெனி வெல்லாக் (1966:262) கூறுகிறார்

நடையியற் கூறுகளை மூன்று நிலைகளில் இனங்காண முடியும் என்பார் ஸ்டீ:ஃபன் உல்மாஸ் (1966).

மொழியியலை ஒட்டியே இவை விளக்கப்படுகின்றன. ஒலிநிலை, சொல்நிலை, தொடக்கநிலை ஆகியவையே அம்மூன்று நிலைகளுமாகும்.

கவிதை நடையில் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் உத்தி. பின்பற்றப்படுவதால் நீக்கல் உத்தி ஒரு இன்றியமையாத திட்டப் பாங்காகக் கருதப்படுகின்றது.

வேற்றுமை உருபுகள், உம்மை உருபு, உவம உருபு போன்ற செயலிகள் கவிதை வடிவில் பெரிதும் நீக்கப்படுகின்றன. கவிதை நடையில் ஒலி நிலையில் பல திட்டப் பாங்குகள் ஆளப்படுகின்றன.

எதுகை, மோனை, முரண், இயைபு, ஓசை போன்ற பல பாங்குகள் இங்கு கையாளப்படுகின்றன. உருவகம், இறைச்சி, உள்ளுறை போன்றவை கவிதையிலேயே பெரிதும் ஆளப்படுகின்றன.

விளைவாக இலக்கண நிலைமாற்றம் கவிதை நடையில் பெரிதும் காணப்படுகின்றது.

இந்நிலை மாற்றங்களைப் புரிந்து கொள்ள முடியாவிட்டால் கவிதையின் கருவைப் புரிந்து கொள்ள இயலாமற் போகும்.

இவற்றைக் கணக்கிடுவதன் மூலமும் ஆசிரியரை இனங்காண முடியும்.

இத்திட்டப் பாங்குகளின் அடிப்படையில் கம்பனின் நடை கூறுகளை ஒலிநிலையில் மட்டும் இங்கு ஆராயப்படுகின்றது.

ஒலிநிலையில் எதுகை, மோனை, முரண், இயைபு போன்றவை அதிகம் இடம் பெறுவதற்கு அடிப்படைக் காரணம் உண்டு.

பழங்காலத்தில் இலக்கியங்கள் வாய் மொழியாகவே வழங்கப்பட்டன.

அவற்றை அப்படியே மனப்பாடம் செய்ய மனதில் பதிய வைக்கும் நினைவாற்றலுக்கு மிகுந்த தேவை இருந்தது

இந்நினைவாற்றலை எளிதாக வளர்த்துக் கொள்ளுவதற்குச் சில உத்திகள் தேவைப் பட்டன.

சில ஒலிகளோ, சொற்களோ, தொடர்களோ, திரும்பத் திரும்பப் பயின்று வருமானால் முழுப் பாடலையும் எளிதாக நினைவிற் கொள்ள முடியும்.

வேதாத்திரிய கவிதைகளில் மரபின் சாயலும், புதுமையின் எழிலும் இழையோடியுள்ளன.

அவைகளில் உலகளாவிய நோக்கும், விஞ்ஞானப் பார்வையும் மெஞ்ஞான அறிவும், மன உணர்வின் வெளிப்பாடும், இலக்கியம் போற்றலும் என பலவகைக் கருக்கள் உருப்பெறுகின்றன.

கவிதையின் நடை என்பது கவிதையின் கருத்திலும், கவிதையின் மொழியிலும்தான் புதைந்திருக்கிறது.

கருத்தையும், மொழியையும் யைாளும் விதத்தில் தான் கவிதையின் நடை வெளிப்படுகிறது.

அணுவினது தத்துவத்தை யான் ஆராய்ந்தேன்
அண்டபிண்ட சராசரங்கள்
அணுவினிலே சூடுண்டு குளிரும் உண்டு
அதனுள்ளே காந்தமென்ற உயிரும் உண்டு”

இவ்வுயைில் சொற்களை இயல்பாகக் கையாண்டு மொழியின் நடைக்கு ஓர் உயரிய பண்பினை ஊட்டியுள்ளது வேதாத்திரியம். எளிய பதங்களை இட்டு தாம் சொல்ல பொருளைத் திறம்படப் புலப்படுத்தியுள்ளார்.

## எதுகை எதுகை எதுகை

அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது அடி எதுகை எனப்படும். கம்பராமாயணத்திலுள்ள பெரும் பாலான பாடல்களில் அடியெதுகை கையாளப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக,

“எனக்கு நல்லையும் அல்லைநீ என்மகன் பரதன்
தனக்கு நல்லையும் அல்லை அத் தருமமே நோக்கின்
உனக்கு நல்லையும் அல்லைவந் தூழ்வினை தூண்ட
மனக்கு நல்லன சொல்லினை மதியிலா மனத்தோய்

நான்கு அடிகளில் முதல் சீரிலும் இரண்டாம் சீரிலும் மூன்றாம் சீரிலும் இரண்டாம் எழுத்துகள் ஒன்றிவர தொடுக்கப்பட்ட முற்று எதுகை கையாளப்பட்டுள்ளது.

முற்றெதுகை கம்பரால் பெரும்பான்மையான இடங்களில் கையாளப்பட்டுள்ளது. இஃது கம்பரின் தனிச் சிறப்பாகும்.

## சீர் எதுகை

சீர் தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது ஓர் எதுகை ஆகும். அடியெதுகையைப் போன்று சீர் எதுகையை கம்பர் அதிகம் பயன்படுத்தவில்லை. என்பது கம்பரின் தனிச் சிறப்பாகும். சான்றாக,

“மந்தாரம் உந்து மகரந்தம் மணந்த வாடை”

வேதாத்திரியத்தில் எதுகை இன்றியமையாத இடத்தைப் பெறுகிறது. அடிதோறும் முதற்சீரின் முதலொழுத்துத் தம்முள் அளவொத்து இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது அடி எதுகையாகும். இத்தகைய கருத்தோட்டம் அமைய வேதாரத்திரிய கவிதைகள் ஏராளமாக உள்ளன.

அணு தோன்றக்....
அணு நிலைக்கு....
அணுவுக்குப் பின்..
அணுவியக்கம்.........

இறையாற்றலின் தன்மைகளையும், சிறப்புகளையும் அறியாமலும், அலட்சியம் செய்தும், தன் முனைப்போடு செயல்பட்டும், மன ஆற்றல் அளவு மீறியும், முறை மாறியும் செயல்பட்டால் அதற்கேற்றபடி பின்விளைவுகளை அனுபவிப்பர் என்ற கருத்தினைக் கூற வந்த வேதாத்திரியம்,

தப்புக் கணக்கிட்டுத் தானொன்றை எதிர்பார்த்தால்
ஒப்புமோ இயற்கை விதி? ஒழுங்கமைப்பிற் கேற்றபடி
அப்போதைக்கப்போதே அளிக்கும் சரிவிளைவு
எப்போதும் கவலையுற்று இடர்ப்படுவார் இதையுணரார்”

இச்செயலில் தப்பு, ஒப்பு, அப்போது, எப்போது போன்ற சொற்களில் உள்ள இரண்டாம் எழுத்து ஒன்று போல் அமைந்து செய்யுளின் இனிமைக்கும், எளிமைக்கும், எளிதில் நினைவில் கொள்ளும் தன்மைக்கும் வழிவகுப்பதாக அமைகிறது.

## மோனை நலன்

பாடல் அடிகளில், சீர்களில் முதலெழுத்து அல்லது அவற்றுக்குரிய கிளையெழுத்துகள் ஒன்றி அமைந்து ஒலிநலன் ஊட்டுவது மோனைத் தொடை எனப்படும்.

இலக்கண அணிகளால் மோனை இருவகைப்படுத்தப்படும் . அடிமோனை , சீர்மோனை என்பனவாகும் அவை. தமிழ்க் கவிதை மரபில் சீர்மோனை வழக்கிலுள்ளது.

அடிமோனை குறித்து இலக்கண நூல்கள் பேசுகின்ற போதிலும் அடிமோனை ஆட்சி அருகிய வழக்கே, அடிமோனை என்பது பாடலின் ஒவ்வொரு அடியின் முதலெழுத்தும் மோனை ஒன்ற அமைவதாகும்

இவ்விலக்கணம் பொருந்திய பாடல்களை நாம் உரையாசிரியர்களின் எடுத்துக் காட்டுகளிலிருந்தே பெரிதும் அறிகின்றோம்.

இக்காலப் புதுக்கவிதைகளிலும், ஐக்கூலி மரைக்கூ முதலிய வடிவங்களிலும் அடிமோனை ஆட்சியைப் பரவலாகக் காண்கின்றோம்

இத்தகு இலக்கிய , இலக்கணச் சூழலில் மகரிஷியின் மரபுக் கவிதைகள் ஆங்காங்கு அடிமோனைத்தொடை ஆட்சியுடன் அமைந்துள்ளமை வியந்து சுட்டத் தக்கனவாய் விளங்குகின்றன.

பின்வரும் பாடற்பகுதி அடிமோனைத்தொடை அழகுற அமைந்துள்ளமைக்குச் சிறந்த காட்டாகும்.

உணர்ச்சிப் பெட்டியாம் உடலுயிர் கட்டு
உட்பொரு ளாகவும் முன்உயிர் உடல்களாய்
உள்ள என் அன்னையை , தந்தையை மதிப்பொடு
உள்ளத்தில் வைத்து வணங்கினேன் உருக்கமாய்
உயிரையும் அறிவையும் என்னுளே செலுத்தி
உயர்தவ முறையை உணர்த்திய ஞான

ஆசான் அவர்களை அன்போடு வணங்கினேன்
அன்னவர் உணர்த்திய ஆக்கினைச் சக்கர
அசைவில் சுழலில் அறிவைப் பொருத்தஎன்
அறிவு ஓர்மையில் நிலைத்து அமர்ந்தது
என்நிலை மறந்து நான் இனிஎச் செயலையும்
எங்கும் எப்போதும் இயற்றா திருக்கவும்
முன் , நிகழ் , பின்எனும் முக்காலத் தையும்
முறையாய் இணைத்து நினைக்கவும் பேசவும்
செய்யவும் ஏற்ற திறன்வளர் கின்றது.
உய்யநல் லறிவின் ஒளிமிகு கின்றது.” (ஞாக..□□,பக்.560,561)

இத்தகைய அடிமோனை ஆட்சிகள் மட்டுமல்லாமல் நாற்சீர் அடிகளில் பொழிப்பு மோனையைத் தவறாது அமைக்கும் தகுதிறத்தை வேதாத்திரியக் கவிதைகளில் பெரிதும் காண முடிகின்றது .

கழிநெடிலடிகளால் ஆன பாக்களில் மோனை எந்தெந்த இடங்களில் அமையவேண்டும் என்பதற்கு இலக்கண நூல்கள் விதி எதுவும் கூறவில்லை.

எனினும் இலக்கிய மரபில் எந்தெந்த இடங்களில் மோனையை அமைக்க வேண்டும் என்பதற்கு எழுதப்படாத விதியொன்று தொடர்ந்து செயற்பட்டு வருகின்றது.

தமிழ்க் கவிதைப் பாரம்பரியத்தில் இவ்வெழுதப்படாத விதி சற்றும் வழுவாத நிலையில் பின்பற்றப்பட்டு வருகின்றது.

இலக்கண நூல்களில் விதிகள் இல்லாத போதிலும் முன்னை இலக்கியப் பயிற்சியால் மகரிஷி அவர்களும் சற்றும் வழுவின்றித் தம் பாடல்களில் இம்மோனை அமைக்கும் மரபை அடியொற்றி யுள்ளார்.

காட்டாக இவ்வாறு மோனையமைந்த எண்சீர் ஆசிரிய விருத்தப் பாடலொன்றை இங்குக் காணலாம்.

உற்றார்கள் மனம் ஒத்த , சமூகம் ஏற்ற
ஒழுக்கமும்சூழ் நிலைக்கிசைந்த ஆண்பெண் நட்பு
வற்றாது ஒளிர்காந்த விளக்கி னுள்ளே
வந்திணையும் இருவிதமின் கம்பி கள்போல்
சற்றேனும் களங்கமிலா நலம்ப யக்கும்
சன்மார்க்க நட்பொழுக்கம் இதுவே யாகும்
மற்றான முறைநட்பு, அக்கம்பி கள்போய்
மத்தியிலே ஒன்றிட்ட விளைவை ஒக்கும்." (ஞாக.பா..962)

காய் காய் மா தேமா என்ற வாய்பாடு கொண்ட எண்சீர் ஆசிரிய விருத்தத்தில் (அடுத்த அரையடியில்) மோனை அமைதல் மரபு. இம்மரபு இம்மரபு போற்றப்பட்டுள்ளமையை இப்பாடலால் அறியலாம்.

## கம்பர் தரும் மோனை நலம்

அடிதோறும் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது அடி மோனை ஆகும். கம்பர் அடிமோனையை தம்பாடல்களில் அரிதாகவே பயன்படுத்தியுள்ளார்.

எனக்கு நல்லையும் அல்லை நீ என் மகன் பரதன்
தனக்கு நல்லையும் அல்லை அத் அத் தருமமே நோக்கின்
உனக்கு நல்லையும் அல்லைவந் தூழ்வினை தூண்ட
மனக்கு நல்லன சொல்லிகை மதியில் மனத்தோய்"

என மோனையில் முதல் சீரில் அல்லாமல் இரண்டாம் மூன்றாம் சீர்களில் முதல் எழுத்து ஒன்றி வர தொடுக்கப்பட்ட அடிமோனை கம்பரால் பயன்படுத்தப்பட்டுள்ளது.

நான்கு அடிகளிலும் முதல் சீரில் முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுக்கப்பட்ட மோனையை கம்பர் ஏன் பயன் படுத்தவில்லை என்பது ஆய்வுக்குரியதாகும்.

கணினி தொழில் நுட்ப உதவியுடன் இஃது ஆராய்ந்து பார்த்தால் எத்தனை விழுக்காடு என்பதை கண்டுபிடிக்கலாம்.

சீர் தோறும் முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது சீர் மோனை எனப்படும்.

முதல் சீரிலும் இரண்டாம் சீரிலும் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது சீர் இணை மோனை எனப்படும். இஃது பரவலாகக் காணப்படுகின்றது.

"முந்தினர் முரண் இலர் சிலவர் மொய் அமர்
நின்று நின்று இலை சில விளம்ப நோகச்கிலென்
நன்று இனி நரரொரு குரங்கை நாம் அறக்
குழுமி மேகங்களை குமுறின குளிர்வளி கொணர்ந்து
தேவரும் அடங்கினர் இயக்கர் கிந்தினர்
தாவரும் தாவை தருக்குத் தாழ்ந்தனர்"

இங்கு முதல், நான்காம் சீர்களில் முதல் எழுத்து ஒன்றி வந்த கீழ்க்கதுவாய் மோனை அமைந்துள்ளது.

செற்றார் எதிர்வரும்....

"முற்றி மூன்று உலகுக்கும் முதல்வன் ஆயது"

இந்த அடியில் முதல் மற்றும் நான்காம் சீரில் முதல் எழுத்து ஒன்றிவர ஒரூஉ மோனை அமைந்துள்ளது.

கம்பர் ஓர் மோனையில் இணை மோனையை அதிகமாகப் பயன்படுத்தியுள்ளார்.

செய்யுளில் , முதல் சொல்லின் முதல் எழுத்தைப் போலவே அடுத்த அடிகளில் வருகின்ற சொல்லின் முதல் எழுத்து அமைந்திருப்பின் அதனை மோனை என அழைப்பர்.

செய்யுள் வரிகள் மீது நாட்டம் கொள்ளவும் , எளிதில் மனனம் செய்யவும இனிமையான ஓசைக்காகவும் மோனை அமைப்பினைப் பயன்படுத்தி மக்களின் மனம் கவரும் பாக்களை இயற்றியுள்ளார் அருட்தந்தை மகரிஷி அவர்கள்.

செய்யுள் வரிகள் மோனை அமைந்திருக்கிறது என்பதை விடத் தாம் சொல்ல வந்த ஆழமான கருத்தினை இலகுவாக வெளியிடுவதில் கை தேர்ந்தவராக இருப்பதை அவரது பாடல்கள் வழிக் காண முடிகிறது. சான்றாக,

உலகம் என்ற மண்மீது அனைவரும் பிறந்தோம்
   உயிர்காக்கும் காற்று ஒன்றே மூச்சு விடுவதற்கு
உலகெங்கும் ஒளிவீசும் சூரியனும் ஒன்றே
   உள்ளகடல் ஒன்றேநீர் ஆவியாகப் பொழிய
உலகில் உள்ளோர் எவரும் இதில் ஒன்றும் செய்ததில்லை
   ஒவ்வொருவரும் பிறந்து வாழ்ந்து செத்துப்போவார்
உலகில் ஒரு பகுதியினர் மற்றவரைக் கொன்று
   உயிர்வாழ்தல் நீதியெனில் கொலைஞர்களே மிஞ்சும்"
(ஞாக.பா.1780)

என்ற வரிகளில் இயற்கை நமக்கு வாரி வழங்கியிருக்கும் கொடையையும், உலக மக்களின். பங்கு இவற்றில் ஒன்றுமே இல்லை என்பதையும்,

இவற்றை எல்லாம் அனுபவிக்கப் பிறந்தவர்களே மக்கள் என்பதையும், தெளிவாக எடுத்துக் கூறுவதோடு, போரினால் ஒரு பகுதி மக்கள் அழிவதும் மற்றவர்கள் உயிரோடு வாழும் கொலைஞர்கள் எனவும் தம் கருத்தை ஆணித்தரமாக எடுத்துரைக்கிறார்.

செய்யுள் வரிகளின் முதல் எழுத்து ஒரே ஓசை உடையதாக அமைந்திருப்பதும் காற்றினை, உயிர்காக்கும் காற்று என்றும் , சூரியனை  ஒளி வீசும் சூரியன் என்றும், கடலினை, உள்ள கடல் என்றும் அடைமொழி  கொடுத்து விளக்கியிருப்பது மேலும் மெருகூட்டுவதாகவே அமைகிறது.

போரை விடுத்து அமைதியான வாழ்க்கை வாழ வேண்டும் என் நற்கருத்தினை நயம்பட விளக்குகிறார் நம் அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி

# வண்ணம்

ஒலி நிலையில் காணப்படும் மற்றுமொரு உத்தி வண்ணம் எனப்படும். ஒரே ஒலி அல்லது அதற்கிணமான ஒலிகள் ஓர் அடியிலோ செய்யுள் முழுவதுமோ இடம் பெறுவதை வண்ணம் என்பர்.

வல்லெழுத்துக்கள் இடம் பெற்றால் வல்லெழுத்து வண்ணம் என்றும், மெல்லினம் பயின்று வந்தால் மெல்லெழுத்து வண்ணம் என்றும், இடையினம் வந்தால் இடையெழுத்து வண்ணம் என்றும் விளக்குவர்.

வேதாத்திரியத்தின் இடையெழுத்து வண்ணம் அமைந்த செய்யுள் வரிகளை இங்கே காண்போம்!

வாழவேண்டும் என்றெண்ணி உலகமீது
வந்ததில்லை எனினும் நாம் பிறந்துவிட்டோம்
வாழவேண்டும் உலகில் ஆயுள் மட்டும்
வாழ்ந்தோர்கள் அனுபவத்தைத் தொடர்ந்து பற்றி
வாழவென்ற உரிமை எல்லோர்க்கும் உண்டு
வாழ்வோர்க்குச் சாதகமாய் வாழுமட்டும்
வாழஉள்ள அனைவருமே ஒன்று கூடி
வகுத்திடுவோம் ஒருதிட்டம் வளமாய் வாழ" (ஞாக.பா.829)

சொற்சிலம்பாடும் சுதந்தரராய் மகரிஷியின் பாடல்கள் அமைந்திருப்பது கற்போர் நெஞ்சங்களைக் கவினுறச் செய்யும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

கம்பராமாயணத்தில் இராமபிரானின் அம்பு இராவணன் உடலுக்குள் புகுந்து சீதாபிராட்டியாரின் நினைவு எந்தப் பகுதியிலாவது இருக்கிறதா என்று உடல் முழுக்கச் சுற்றி வந்து மறுபக்கம் வெளியேறியதாக விளக்குவார் கம்பர்.

இராவணன் உடல் முழுக்கச் சுற்றி சுற்றி வந்த அம்பைப் போல அருட்தந்தையின் அமுத வரிகளில் வாழ என்ற சொல், செய்யுள்

**வரிகளின் முதலிலும், இடையிலும், இறுதி வரியின் முடிவிலும் சுற்றி வந்து சிறப்புச் சேர்க்கின்றது**

**வளமாய் வாழவேண்டும் என்பதையே தம் களமாய் அமைத்துக் கொண்ட மகரிஷியின் கருத்துகள் உலகமெல்லாம் பரவும் போது போரில்லாப் புது உலகம் புதிதாகத் தோன்றிவிடும்.**

ஒலி நிலையில் காணப்படும் மற்றொரு உத்தி வண்ணமாகும். ஒரே ஒலி அல்லது அதற்கிணையான ஒலிகள் ஒரு அடியிலோ. பாடல் முழுவதுமோ பயின்று வருவதனையே வண்ணம் என்கின்றனர்.

வல்லெழுத்துக்கள் மிகுந்து வருமானால் வல்லெழுத்து வண்ணம், மெல்லெழுத்து மிகுந்து வருமானால் மெல்லெழுத்து வண்ணம் எனப்படும்.

இவ்விரு வண்ணங்களையும் மிக அழகாகப் பயன் படுத்தியுள்ளார் கம்பர்.தூங்குகின்ற கும்பகர்ணனை எழுப்ப பெரும் முயற்சிகள் செய்கின்றனர்.

இரு பெண்கள் நெல் குற்றும் பொழுது இரு உலக்கைகளை மாறி மாறி குற்றுவதைப் போல அமைந்துள்ளது. அப்பாடல் கிங்கரர்கள் கோபம் கொண்டு கும்பகர்ணனை எழுப்புகின்றனர்

"உறங்குகின்ற கும்பகர்ண
உங்கள் மாய வாழ்வு எலாம்
இறங்கின்றது இன்று காண்
எழுந்திராய்! எழுந்திராய்
கறங்கு போல வில் பிடித்த
காலதூதர் கையிலே
உறங்குவாய் உறங்குவாய்
இனிக்கிடந்து உறங்குவாய்".

இப்பாடலில் வல்லின வண்ணம் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இராவணின் தங்கை சூர்ப்பனகை பஞ்சவடியென்னும் சோலையை நோக்கிப் புறப்பட்டாள்.

மயிலின் சாயலும், அன்னத்தின் அணி நடையும் வாய்ந்த மங்கை பஞ்சின் மெல்லடிப் பாதங்கள் படியில் தோய பர்ணசாலையை நோக்கி வருகின்ற அந்த பான்மையை,

"பஞ்சி ஒளிர். விஞ்சு குளிர் பல்லவம் அனுங்க
செஞ்செவிய கஞ்சம்நிகர், சிறயள் ஆகி
அஞ்சொல் இளமஞ்ஞை என, அன்னம் என, மின்னும்
வஞ்சி என, நஞ்சம் என, வஞ்சி மகள் வந்தாள்".

அன்னம் போல் நடந்து வந்த அழகினை மெல்லிசை வண்ணத்தால் எழுதியமைந்த கம்பரின் கவித்திறம் கற்போர் கருத்தினைக் கவர்வதாகும்.

## இயைபு இயைபு இயைபு

ஒலிநிலையில் இயைபு என்பது மற்றொரு திட்டம் பாங்காகும். பெரும் பாலான இலக்கியங்களில் இதனைக் காண்கையில் தமிழ் இலக்கியம் இதில் மாறுபட்டு நிற்கிறது.

ஆங்கிலம் முதலான மொழிகளில் ஈற்று இயைபு காணப்படுகின்றது. தமிழில் பழைய இலக்கியங்களில்

கம்பர் ஈற்று இயைபினையும் அடிமுதல் இயைபினையும் கையாண்டுள்ளார்.

இவ்விரண்டில் மிகுந்து காணப்படுவது அடிமுதல் இயைபே. பெரும்பாலான பாடல்களில் எல்லா அடிகளிலும் முதல்சொல் இயைபு பெற்று விளங்குவதைக் காணலாம்.

"விழுந்தனர், கழன்றனர், வெகுண்டனர், திரிந்தார்
அழுந்தினர், அழுந்திலர், அகன்றிலர், அகன்றார்
எழுந்தனர், எழுந்திலர், எதிர்ந்தனர், முதிர்ந்தார்
ஒழிந்தனர், ஒழுந்திலர், உணர்ந்திலர்கள் ஒன்றும்"

இப்பாடலில் கம்பர் விழுந்தனர். அழுந்தினர், எழுந்தனர், ஒழிந்தனர் என அடி முதல் இயைபினையும் திரிந்தார், அகன்றார், முதிர்ந்தார் என அடியிறுதி இயைபினையும் கையாண்டுள்ளார்.

"சிறை பெற்றான், திகழ்கின்ற மேனியான்
முறை பெற்று ஆம் உலகு எங்கும் மூடினான்.
நிறை பெற்று ஆவிநெருப்பு உயிர்க்கும் வாள்
உறை பெற்றால் எனல் ஆம் உறுப்பினாள்".

அடி முதல் இயைபு கையாளப்பட்டுள்ளது. மேலும்,

"மன்னவர் வருவாரும், மறையவர் நிறைவாரும்
இன்இசை மணியாழின் இசை மது நுகர்வாரும்
சென்னியத் திரிவாரும். விறலியர் செறிவாரும்
கன்னலின் மணவேலைக் கடிகைகள் தெரிவாரும்".

என்ற அடிகளில் அடி ஈற்று இயைபு கையாளப்பட்டுள்ளது.

"தேர்மிசை வருவாரும், கிவிகையில் வருவாரும்,
ஊர்தியில் வருவாரும், ஒளிமணி நிறைவுடைக்
கார்மிசை வருவாரும், கதிணியில் வருவாகும்
பார் மிசை வருவாரும், பண்டியில் உருவாகும்"

என்ற இப்பாடலில் தேர், ஊர், கார், பார் என அடி முதல் இயைபு, வருவாரும் என்னும் சொல் இரண்டாம் சீரில் இயைபாகவும், ஈற்று இயைபு கொண்டும் ஆக்கப்பட்டடள்ளது. இவ்வியைபு பாடலுக்கு ஒசை நயத்தைத் தருவதாக அமைந்துள்ளது.

ஒலி நிலையில் இயைபு என்பது இன்னொரு உத்தியாகும் .
தமிழ் மொழியமைப்பில் இயைபு (□□□□□□□) இன்றியமையாததாக அமைந்திருப்பது மொழியின் சிறப்பிற்கு வலு சேர்க்கிறது.

அது போன்று செய்யுளின் முதல் சொல்லின் ஈற்றெழுத்தும் அவ்வரியின் இறுதிச் சொல்லின் ஈற்றெழுத்தும் ஒன்று போல் இயைந்து வருவது இயைபு எனப்படும். ஈற்றெழுத்து இயைந்து வருவதை ஈற்றியைபு எனலாம்.

அருட்தந்தையின் வரிகளில் சில ஈற்று இயைபோடு அமைந்திருப்பதைக் காணலாம்.

உலகமெலாம் பருவமழை ஒத்தபடி பெய்யட்டும்
உழவரெலாம் தானியத்தை உவப்புடனே பெருக்கட்டும்"
(ஞாக.பா.1853)

என்ற வரிகளிலும்,

இயந்திரங்கள் இயக்குமுறை தொழில் நுட்பங்கள்
இயற்கை எழில் விநோதங்கள், அகண்ட வானில்" (ஞாக.பா.)

என்ற வரிகளிலும் இயைபு உத்தியைப் பயன்படுத்திப் பாடல் வரிகளை இனிமையாக்கியதோடு ஏழை எளிய வரும் உவகையோடும், உவப்போடும் வாழ வேண்டும் என்ற கருத்தினை, எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் என்ற வகையில் விளக்கி மக்கள் மத்தியில் சிறப்புடன் விளங்கி நிற்கிறார்

அடி முதல் இயைபு அமையும் வகையில் கம்பர் பெரும்பான்மையான பாடல்களை அமைத்துள்ளார். சான்றாக,

"முடிவெழும் ஒலியில் முறையின் யாழ்நரம்பு
எழவெழும் ஒலியில் இமைப்பில் கண்ணினர்
விழவெழும் ஒலியில் வேறும் ஒன்றில்
அழவெழும் ஒலியலது அரச விதியே"

என்ற பாடலில் இராமன் பிரிவை எண்ணி மக்கள் அழுவதால் உண்டாகிய ஒலியைத் தவிர ஏனைய ஒலிகள் இல்லாதன ஆயின என்பதை இப்பாடல் குறிப்பிடுகின்றது.

# முரண் முரண் முரண்

அடியிலோ, சீரிலோ சொற்கள் மொழியிலும் பொருளிலும் முரணுதல் முரண் ஆகும்.

"செறி கழல் அரக்கர்தம் அரசு சீரியோர்

நெறி அலது ஆதலில் நிலைக் கலாமையும்”

“இவனை இன்துணை உடைய போர் இராவணன், என்னே
புவனம் மூன்றையும் வென்றது ஒர்பொருள் எனப் புகழல்
சிவனை நான் முகத்து ஒருவனை, திருநெடுமால் ஆம்
அவனை அல்லவர் நிகர்ப்பவர் என்பதும் அறியேன்!”

கீதங்கள் இசைத்தனர் கின்னரர்; கீதம் நின்ற
பேதங்கள் இயைம்பினர் பேதையர் ஆடல் மிக்க
பூதங்கள் தொடர்ந்து புகழ்ந்தன; ஆசு ரேசர்
வேதங்கள் இயம்பினர்; தென்றல் விழுந்து செய்”

பொருள் முரணை விட சொல் முரண் அடிகளின் முதல் சீரில் அதிகம் பயன் படுத்தப்பட்டுள்ளது.

அடிதோறும் முதலில் சொல்லே, அதன் பொருளோ முரண்பட (எதிர்ச்சொல்லாய் – வேறுபாடாய்) வருவது அடிமுரணாகும். இந்நிலை வேதாத்திரிய கவிதைகளில் மிகுந்துள்ளன.

“விரிவான, பிரிவான, சரியான, பெரிதான”

“அஞ்ஞானம், விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம், இஞ்ஞானம்”

## முடிவுரை

கம்பர் ஒலிநிலையில் எதுகை, மோனை, முரண், இயைபு ஆகியவற்றை நடையியல் உத்திகளாகப் பயன்படுத்தியுள்ளார்.

வேதாத்ரியத்தில் நடை மக்களின் நடை என்றால் அது மிகைகயில்லை. பாமர மக்களும் படித்துப் புரிந்து கொள்ளக்கூடிய எளிய நடை. வேதாத்தியத்தின் படைப்புகள் பலவற்றுள் காணக்கிடைக்கும் மணிமகுடம் போன்ற கவிதை வரிகளை நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன.

கம்பராமாயணம் வேதாத்திரியம் முழுவதையும் புள்ளியியல், நடையியல் அடிப்படையில் ஆராய்ந்து பார்த்தால் நடையியற் கூறுகள் துல்லியமாகக் கண்டறியப்படலாம்.

ஒலி நிலையிலும் சொல் நிலையிலும் தொடர் நிலையிலும் பல்வேறு ஆய்வுகளை மேற்கொள்வதற்கு ஒரு பரந்துபட்ட ஆய்வுக் களமாக கம்பராமாயணமும் வேதாத்திரியமும் அமைந்துள்ளது என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

## துணைநின்ற நூல்கள்


**கம்பராமாயணம், சுவாமி சித்பவானந்தர்.**

**கம்பராமாயணம், வ.சுப.மாணிக்கம்**

**இணையதள தகவல்கள்**

**ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிஷி**

# கம்பனும் வேதாத்திரியமும்

## நாடும் அரசும்




## பானுகுமார் படைப்புலகம்

# கம்பனும் வேதாத்திரியமும்

((நாடும் அரசும்)

அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

கம்பன் தன் காவியத்தில் பல அறங்களையும் ஒழுக்கங்களையும் கூறியிருந்தாலும், ஒரு நாடும் அதன் அரசுகளும் இருக்க வேண்டிய முறை பற்றியும், மன்னன் ஆட்சி செய்ய வேண்டிய முறை, அமைச்சர்கள் தகுதி, அவர்கள் பணிகள் என்று பலவற்றையும் பற்றிக் கூறுவது நம்மை வியக்க வைக்கிறது.

வேதாத்திரியத்திலும் அரசியல் எப்படி இருக்க வேண்டும்? ஆட்சியாளர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்க வேண்டும்? வறுமையற்ற ஆட்சி அமைய என்ன செய்ய வேண்டும்? வாழ வைக்கும் ஆட்சியே தேவை...போன்ற பலவற்றையும் சொல்லியிருப்பது நம்மை ஆச்சரியத்தில் வைக்கிறது.

இராமராஜ்யம் என்பது ஒன்று இருக்குமேயானால் நாடும் அரசும் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று இலக்கணம் வகுத்துச் சென்றுள்ளான் கம்பன்.

1200 ஆண்டுகளுக்கு முன் அவன் இயற்றிய இராமகாதையில் கூறப்படும் அரசு முறைமை, நாட்டின் பண்பு, மக்களின் பண்புகள் முதலியன, “அட, ஒரு நாடு இப்படியல்லவோ இருக்க வேண்டும்!” என்று நினைக்கத் தூண்டுகிறது.

கோசல நாட்டு மக்கள் எப்படி இருந்தார்கள்? கம்பன் கூறுவது :

“வண்மையில்லை ஓர் வறுமை இன்மையால்
திண்மையில்லை நேர் செறுநர் இன்மையால்

உண்மையில்லை பொய்உரை இல்லாமை யால்
ஒண்மை இல்லை பல் கேள்வி மேவலால்’

(மக்களிடத்தில் பொறாமை இல்லை. ஏனெனில் அவர்களிடம் வறுமை இல்லை.அனைவரிடமும் பொருட்செல்வம் இருந்தது. அறியாமை இல்லை; ஏனெனில் அவர்களிடம் கல்வி இருந்தது. அந்நாட்டில் உண்மை இல்லை; ஏனெனில் அவர்களிடம் பொய் இல்லை)

கவனிக்கவேண்டியது இது. அந்நாட்டில் உண்மை இல்லை என்கிறார். ஆக அனைவரும் பொய்யர்களா? இல்லை. உண்மை என்ற ஒன்று தனியாக இருக்கவில்லை. பொய் இருந்தால் தானே அதற்கு மாற்றாக உண்மை என்ற ஒன்று தேவை? பொய்யே இல்லை என்றால் உண்மை என்பதும் இல்லை. அனைத்தும் ஒரே நிலை தானே!

சரி. மக்கள் இப்படி உத்தமர்களாக இருப்பதால் அந்த நாட்டில் வேறு என்னவெல்லாம் இல்லை ?

“கூற்றம் இல்லை ஓர் குற்றம் இலாமையால்;
சீற்றம் இல்லைதம் சிந்தையின் செய்கையால்;
ஆற்றல் நல்லறம் அல்லது இல்லாமையால்
ஏற்றம் அல்லது, இழிதகவு இல்லையே”

(கோசல நாட்டு மக்களிடம் கூற்றுவன் செய்யும் கொடுமைகள் இல்லை; ஏனெனில் மக்களிடத்தில் குற்றங்கள் இல்லை. அவர்கள் தூய்மையான உள்ளம் கொண்டார்கள்; ஆதலால் அவர்களிடம் சினம் இல்லை. சினம் இல்லாததால் குற்றங்கள் இல்லை. அவர்கள் நல்ல

அறங்களையே செய்ததால் தவறுகள் இல்லை; எனவே அவர்களுக்குப் புகழ் மட்டுமே உண்டு).

முதல் பாடலில் கல்வி பெருகியுள்ளது தெரிகிறது. கல்வியினால் நல்ல பண்புகள் ஏற்பட்டுள்ளன. எனவே அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாசொல் என்ற தீய பண்புகள் மக்களிடம் இல்லை. அதனால் சண்டை, சச்சரவுகள் இல்லை. அதனால் அவர்களுக்குப் புகழே தவிர வேறெதுவும் இல்லை.

ஒரு முன்மாதிரியான நாட்டையும் மக்களையும் காண்கிறோம்.

சரி. இம்மக்கள் யார்? இவர்கள் இருப்பிடம் எப்படிப்பட்டது?

“தங்குபேர் அருளும் தருமமும் துணையாத்
தம்பகைப் புலன்கள் ஐந்து அவிக்கும்
பொங்கு மாதவமும் ஞானமும் புணர்ந்தோர்
யாவர்க்கும் புகல் இடம்“

என்றும் குன்றாமல் நிறைந்திருக்கும் கருணையுள்ளவர்கள்; அறத்தை மறவாதவர்கள்; இவைகளைத் துணையாகக் கொண்டு ஐம்புலன்களையும் அடக்கி ஆள்பவர்கள்; உயர்ந்த தவத்தையும் அறிவையும் உடையவர்கள்; உலகப்பற்றை விட்டவர்களான முனிவர்கள் யாவர்க்கும் புகலிடமாக விளங்குவது அயோத்தி மாநகரம்)

இத்தயை ஆட்சியைத்தான் விரும்புகிறது வேதாத்திரியம்.

வேதாத்திரியம் ”வாழ வைக்கும் ஆட்சி வேண்டும் என்று சொல்கிறது.

□கடன், வறுமை, கல்வியின்மை என்ற மூன்று
களங்கங்கள் உலகினிலே மறைய வேண்டும்.
உடன்பிறந்தார் போல் உள்ளம் ஒன்றி மக்கள்
உயிர்நிலையில் வாழவைக்கும் ஆட்சி வேண்டும்.” (ஞாக.பா.147)

அயோத்தியில் வாழும் மக்கள் வாழ்க்கை முறை என்ன? எத்தகைய தொழில்கள் நடைபெற்றன?

கம்பன் கூறுவதைப் பாருங்கள்

“அகில் இடும்புகை, அட்டில் இடும்புகை,
நகரின் ஆலை நறும்புகை நான்மறை
புகலும் வேள்வியின் பூம்புகையோடு அளாய்
முகிலின் விம்மி முயங்கின எங்கணும்”

(அகில்கட்டைகளிலிருந்து வரும் புகை, வீடுகளிலிருந்து உணவு தயாரிப்பால் எழும் சமையல் புகை, கரும்பாலைகளிலிருந்து வரும் புகை, நான்கு வேதங்களின் முறைப்படி செய்யப்படும் வேள்விகளிலிருந்து வரும் வேள்விப்புகை இவை அனைத்தும் சேர்ந்து மேகத்தைப் போன்று எங்கும் பரவியுள்ளன)

இதுபோன்று □வறுமையற்ற வாழ்வு□ வேண்டும்□ என்று சொல்கிறது வேதாத்திரியம்.

"வறுமையிலே வாடிடுவோர் வயிற்றுப்பசித் துன்பம்,
    வழிவழியாய் தொடர்குடும்ப உறுப்பினர்கள் துன்பம்,
பொறுமைகொள்ள முடியாது அவர்கள்மனம் நிலைத்து,
    பொதுநலமும், ஒழுக்கம் எனும் புனிதக்கட்டுப் பாடும்
வெறுமையென்ற வெள்ளத்ததில் வீழ்தாலென் னாகும்?

வேண்டா துன்பங்கள் விளைவதோடு, உளநோய்கள்
பெறும்மனித சமுதாயம். பிச்சைநோய், திருட்டு,
பிழையான செயல்பலவாம் பேரறிஞர் கடமை என்ன?"
(ஞாக.பா.180)

"தள்ளாவினையுளும் தக்காரும் தாழ் விலாச்
செல்வரும் சேர்வது நாடு"

நீங்காத விளைவும், அறவோர் திறவோர் ஆகிய சிறந்தவர்களும், குறைவற்ற செல்வம் உடையவர்களும் சேர்ந்திருப்பதே நாடு என்பது வள்ளுவம்.

சரி.மக்களும் நாடும் இப்படி இருக்க வேண்டுமென்றால், அரசன் எப்படி இருக்க வேண்டும்?

புறநானூற்றுக் காலங்களில் மன்னனை வைத்தே நாடு இயங்கியது. "மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் என்று புறநானூற்றின் ஒரு பாடல் கூறுகிறது. குடிமக்களுக்கு அவ்வளவு பெருமை இல்லை.

ஆனால் கம்பன் காலமான 12-ம் நூற்றாண்டில் மன்னராட்சியே இருந்துவந்தாலும் குடிமக்களுக்கே பெருமை என்பதுபோல் தெரிகிறது. மக்களின் ஆதரவு இல்லாமல் மன்னனால் சரியான அரசாட்சி செய்ய இயலாது என்பதாகக் காட்டுகிறார் கம்பர்.

"வையம் மன்னுயிராக, அம்மன்னுயிர்
உய்யத் தாங்கும் உடலன்ன மன்னனுக்கு
அய்யம் இன்றி அறம்கடவாது அருள்
மெயின் நின்றபின் வேள்வியும் வேண்டுமோ"

மக்கள் விழிப்புணர்வுடன் இருந்தால் தான் இத்தகைய அரசராட்சி நடைபெறும் என்பதனை வேதாத்திரியம்.......

வாழத்தெரியாதோர் பெரும்பாலோர் வாழ்நாட்டில்
ஆளத் தெரியாதோர் ஆட்சியே நடைபெறும்.
கோழை, கயவர், கெலைஞர். தடியர்கள்,
ஏழை, நோயுற்றோர் எங்குமே காட்சியாம்." (ஞாக.பா.129)

மன்னன் உலகத்தின் அனைத்து உயிர்களையும் உயிராகக்கொண்டு தான் ஒரு உடலாக மட்டுமே செயலாற்ற வேண்டும். அவ்வாறு இயங்கும் மன்னனை விட்டு விலகாது அறம் உடன் இருக்கும். இவ்வாறு இரக்கத்துடனும், உண்மையுடனும் இருக்கும் அரசன் வேள்வி செய்யவும் வேண்டுமோ?

அரசனை வெறும் உடல் போல இருக்க வேண்டும் என்றும், அனைத்து உயிர்களும் அவனது உயிர் என்றும் கூறுகிறார் கம்பர். இப்படி ஒரு அரசன் இருந்தால் அவன் இறை வழிபாடு கூட செய்ய வேண்டியதில்லை என்றும் அறத்தின் தேவதை அவனுடன் இருப்பாள் என்றும் கூறுகிறார். மக்களே உயர்ந்தவர், அரசன் வெறும் கருவிதான் என்று அன்றே காட்டிவிட்டார் கம்பர்.

அரசனின் ஆட்சி எப்படியிருக்க வேண்டும்? கம்பர் கூற்று:

"மண்ணிடை உயிர்தோறும் வளர்ந்து தேய்வின்றி
தண்ணிழல் பரப்பவும், இருளைத் தள்ளவும்,
அண்ணல்தம் குடைமதி அமையும், ஆதலால்
விண்ணிடை மதியினை மிகை இது என்னவே"

(உலகில் உள்ள உயிர்களுக்கெல்லாம் இனிய நிழலைத் தருவது தசரதனின் வெண்குடை நிழல். அறியாமை இருளை அகற்றவல்லது அதுவே. உலக உயிர்களுக்குப் போதுமானது அவன் ஆட்சியின் நிழல்.இது தவிர வானத்தில் சந்திரனின் நிழல் தேவை இல்லை)

வேதாத்திரியம் “அறிஞர்கள் ஆட்சி” வேண்டும் என்று வலியுறுத்துகிறது.

“பொருள்துறையில் கற்பொழுங்கில் இன்றுள்ள சிக்கல்
பூவுலகில் மனிதரிடை குற்றங்கள் பலவாய்,
அருள்துறையில் மக்கள்மனம் செல்லாத வாறு,
அறிவினையே திசைமாற்றி, அலைத்தமைதி போக்க
மிரள்கின்றார் பெரும்பாலோர் செய்வதறி யாமல்,
மிகுதிபொருள் வறுமை யொழித்தே கல்வி யூட்டி
இருள்நீக்கும் அறிஞர்களே அரசியலை எங்கும்
ஏற்றுக் கொண்டால் உலகம் இன்பவாழ் வெய்தும்.” (ஞாக.பா.153)

அவன் ஆட்சி சரி. அவன் எப்படி நாட்டைக் காக்கிறான்?

“வய்யகம் முழுவதும் வறிஞன் ஓம்பும் ஓர்
செய்எனக் காத்து இனிது அரசு செய்கிறான்”

ஒரு சிறிய அளவிலான நிலத்தை உடைய உழவன் தன் நிலத்தை எப்படிப் பாதுகாப்பானோ அப்படி தசரதன் தன் நாட்டைப் பாதுகாத்தான்.

மன்னனின் எப்படிப்பட்ட குணங்கள் கொண்டவனாக இருக்க வேண்டும்?

"இனிய சொல்லினான், ஈகையன், எண்ணினன்
வினையன்,தூயன்,விழுமியன்,வென்றியன்
நினையும் நீதி நெறிகடவான் எனின்
அனைய மன்னற்கு அழிவும் உண்டாம் கொலோ"

(இனிய மொழி, ஈகைக்குணம், ஆழ்ந்த சிந்தனை, வினை செய்யும் வல்லமை, குற்றமற்ற பண்பு, சிறந்த குணம், செயலிலே வெற்றி அடையும் திறன், நீதிநெறி வழுவாமை — இந்தக் குணங்களை அரசன் கொண்டிருந்தால் அவனுக்கு எக்காலத்திலும் யாராலும் அழிவில்லை

அரசன் மட்டுமே எவ்வாறு நன்றாகச் செயல்பட முடியும்? எவ்வளவு வலிமை உடையவனாக இருப்பினும் மேலே சொன்ன குணங்கள் இருந்தாலும் தனித்துச் செயல்பட முடியாதே ?

இராமன் சுக்ரீவனுக்கு அறிவுரை கூறும் விதமாக அமைந்துள்ள பாடல் இப்படி வருகிறது :

"வாய்மைசால் அறிவின் வாய்த்த மந்திர மாந்த ரோடும்,
தீமைதீர் ஒழுக்கின் வந்ததிறத்தொழில் மறவரோடும்"

உண்மையை ஆராய்ந்து உணரும் அறிவுள்ள அமைச்சர்களோடும், குற்றமற்ற ஒழுக்கத்துடன் திறமையாக நிர்வாகத்தை நடத்தும் வீரர்களோடும் ஆலோசித்துப் பின்னர் செயல் ஆற்ற வேண்டும்.

ஆக அரசனுக்கு உரிய குணங்கள், அவன் நல்ல அறிவுள்ள அமைச்சர்களோடு சேர்ந்து செயலாற்ற வேண்டியது முதலியன கம்பனால் சுட்டிக் காட்டப்பட்டது.

அமைச்சன் அறிவுள்ளவனாக மட்டும் இருந்தால் போதுமா? அவனது குணங்கள் என்ன?

“உற்றது கொண்டு மேல்வந்து உறுபொருள் உணரும் கோளார்,
மற்றது வினையின் வந்தது ஆயினும் மாற்றல் ஆற்றும் பெற்றியர்;
பிறப்பின் மேன்மைப் பெரியவர்; அரிய நூலும் கற்றவர் ;
மானம் நோக்கின் கவரிமா அனைய நீரார்“

மேலே கண்டது அமைச்சர்களின் தேர்வுக்கான குணங்களாகக் கொண்டால், அவர்கள் எப்படிச் செயலாற்றவேண்டும் என்று கம்பன் கூறுகிறான் என்று பார்த்தால் மெய் சிலிர்க்கிறது:

“தம் உயிர்க்கு உறுதி எண்ணார் தலைமகன் வெகுண்டபோதும்
வெம்மையைத் தாங்கி நீதி விடாதுநின்று உரைக்கும் வீரர்
செம்மையின் திறம்பல் செல்லாத் தேற்றத்தார் தெரியும் காலம்
மும்மையும் உணர வல்லார் ஒருமையே மொழியும் நீரார்”

தனக்கு மட்டுமே நன்மை வேண்டும் என்று கருத மாட்டார்கள்; அரசன் சினம் கொண்டாலும் தாங்குவார்கள்; நீதியை விடாது பின்பற்றுவார்கள்; அரசனையும் நீதியை விட்டு விலகாதபடி அறிவுறுத்துவார்கள்; மூன்று காலங்களைப்பற்றியும் அறிந்துகொண்டு உண்மையே, தாம் நாட்டிற்கு நன்மை பயக்கும் என்று கருதுவதையே உரைக்கும் தன்மை உள்ளவர்கள்

கம்பன் மட்டுமே இவ்வாறு அமைச்சர் பற்றிக் கூறினானா? அதற்கு உரைகல் எது? வழக்கம் போல் வள்ளுவன் தான் :

“தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையார்
சொல்லலும் வல்லது அமைச்சு”

செய்தே ஆக வேண்டிய செயல்களை ஆய்ந்து அறிதல், செயல் செய்யவேண்டிய வழிகளை நன்கு ஆய்ந்து உறுதியாகத் தம் கருத்தை முன்வைத்தல் — இவற்றில் வல்லவனே நல்ல அமைச்சன்.

ஆக, நாட்டு மக்கள் நன்றாக இருக்க

- அவர்களுக்குக் கல்வி வேண்டும்,
- குற்றம் இல்லாமல் இருக்க நாட்டில் செல்வம் வேண்டும்,
- அச்செல்வம் மக்களிடம் சரியான அளவில் இருக்க வேண்டும்,
- பல வகையான மக்கள் வேறுபாடின்றி ஒருங்கே இருக்க வேண்டும்,
- இவை அனைத்தையும் நடத்த நல்ல மன்னன் வேண்டும், அவன் ஆட்சி குளுமையாக இருக்க வேண்டும், அவன் மக்களைத் தன் உயிர் போல் கருத வேண்டும்,
- அப்படி ஆட்சி செய்ய நல்ல அமைச்சர்கள் வேண்டும்.
- அந்த அமைச்சர்கள் இவ்வாறெல்லாம் இருக்க வேண்டும்?

என்று நாடு இருக்க வேண்டிய நிலையையும், அதற்கு மன்னன் தரம், அவனது அமைச்சின் தரம் என்ற பல நோக்கில் கம்பன் காட்டும் நாடாளும் வழிமுறை நம்மை அவ்வாறான ஒரு நாட்டு நிலைமை ஏற்படாதா என்று ஏக்கம் கொள்ள வைக்கிறது.

இந்த ஏக்கத்தைப் போக்க ”ஓர் உலக ஆட்சி வேண்டும் என்கிறது வேதாத்திரியம்.

அரசியல் தலைவர்களாலோ, மதத் தலைவர்களாலோ, பொருள் துறைத்தலைவர்களாலோ உலகில் அமைதி ஏற்படுத்திட முடியாது.

ஏனெனில் இவர்கள் தனித்தன்மையில் எவ்வளவு தான் உயர்நோக்கம் உடையவர்களாக இருந்த போதிலும், ஒரு குறிப்பிட்ட வகையில் வாழ்க்கை நலத்தில் எல்லை கட்டி குழுவினர்கள் அளித்துள்ள பதவி, பணம், இவற்றிற்குக் கட்டுப்பட்டவர்கள்.

ஆகவே ஆன்மீகத் துறையில் உலக மக்கள் அனைவரையும் பொறுப்புடன் இணைத்து நலம் காக்க ஆன்மீக நோக்குடைய ஒரு இயக்கம் தான் நேர்-நிறை உணர்வோடு உலக அமைதிக்கு வழிகாட்ட முடியும்.

வேதாத்திரியம் கொடுக்கும் திட்டமோ, மிகவும் எளிது; புரிந்து கொள்ளவும் செயல்படுத்தவும் இயல்பானது.

- நாடுகள் சபைக்குப் போதிய அதிகாரமளித்து உலக நாடுகள் ஒன்றிணைந்து உலகிலுள்ள எல்லா ஆட்சி எல்லைகளையும் பாதுகாக்கும் பொறுப்பைக் கூட்டாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.
- இப்போதுள்ள எல்லைத் தகராறுகளை ஐ.நா. சபை ஏற்படுத்தும் நீதிமன்றத்தின் மூலம் எல்லா நாடுகளும் எதிர்ப்பின்றி ஏற்றுக் கொள்ளக்கூடிய திட்டமும் செயலும் நாம் கொடுக்கும் திட்டத்தின் சாரமாகும். எல்லைகளின் பாதுகாப்பு ஐ.நா.சபை மூலம் உலகம் ஏற்றுக் கொண்டால் தனித்தனியே எந்நாட்டுக்கும் ராணுவம் தேவைப்படாது.
- இன்றுள்ள ராணுவ அமைப்புச் செலவையும், போர் வீரர்களின் சேவையையும், பின்தங்கிய நாடு, பின்தங்கிய மக்கள் இவர்கள் முன்னுக்கு வரவேண்டிய சேவைகளில் ஐ.நா. சபை மூலம் ஈடுபடுத்தி விடலாம்.
- ராணுவத்தின் செலவும் ஆற்றலும் மக்கள் நல சேவைக்குத் திருப்பப்பட்டு விட்டால் 15 ஆண்டுக் காலத்திற்குள்ளாக உலகிலுள்ள ஒவ்வொரு நாடும் சமமான பொருளாதார வசதியோடும், அன்பு வளம் பெற்ற உள்ளங்களோடும் அமைதியாக வாழ முடியும்.
- உலகெங்கும் ஊர் வாரியாக நகர் வாரியாக, நாடுகள் வாரியாக இந்தத் திட்டத்தைப் பற்றிச் சிந்திக்கவும். எந்த பிரிவினருக்கும்

இழப்பில்லாத வகையில் உலக அமைதி ஏற்படத்தக்கவாறு முடிவெடுத்துப் பின்பற்றலாம்.

- இந்த பெருநோக்கச் சேவையாற்ற வாக்கு, பொருள், ஆற்றல் என்ற எவ்வகையாலும் உலகுக்குத் தொண்டு செய்ய வாருங்கள். கூடுங்கள். நலம் செய்து நலம் கண்டு மகிழுங்கள் என்று அன்போடு வேதாத்திரியம் அழைக்கிறது..

"உலக சமாதானம் வேண்டுமானால் முதலில்
மனிதன் மனதில் அமைதி வந்தாக வேண்டும்".

.

உலக நல வேட்பு:

"உலகிலுள்ள பொறுப்புடைய தலைவரெல்லாம்
உயிரறிவை உள்ளுணர்வாய்ப் பெறுதல் வேண்டும்,
உலகனைத்து நாடுகளின் எல்லைகாக்க
ஒருலகக் கூட்டாட்சி வலுவாய் வேண்டும்;
உலகில் போர் பகை அச்சமின்றி மக்கள்
உழைத்துண்டு வளம்காத்து வாழவேண்டும்
உலகெங்கும் மனிதகுலம் அமைதியென்னும்
ஒரு வற்றாத நன்னிதி பெற்றுய்யவேண்டும்." (ஞாக.பா.)

"அறியாமை அழிவுக்குத் துணை போகும்,
ஞானம் ஆக்கத்திற்கு அச்சாணியாக இருக்கும்".(ஞாக.பா.)

.

"அறிவறிந்தோர் எண்ணிக்கை பெருகவேண்டும்
அன்பு கடமை ஆட்சி அறம் தொண்டெல்லாம்
அறிவறிந்தோர் விளக்கும் வாறுணர்ந்து போற்றி

அருள் நெறியில் மக்களெல்லாம் வாழவேண்டும்
அறிவறிந்தோர் விளக்கத்தால் பழக்கம் சீராம்
அறக் கல்வி குழந்தைகட்குக் கிட்டவேண்டும்
அறிவறிந்தோர் அகன்ற கருத்தில் உதிக்கும்
ஆட்சிமுறை மலர்ந்துலகம் உய்யவேண்டும்." (ஞாக.பா.)

## சிறந்த ஆட்சி எது? கம்பன் சொல்கிறான்

மணக்கோலத்தில் கண்ட தன் மகன் இராமனுக்கு மாமுடி புனைவித்து மன்னனாக்க எண்ணம் கொண்டான் மாமன்னன் தயரதன்.

அமைச்சர் பெருமக்களும் அதனை ஏற்றனர். உடனே தயரதன் தன் குலகுருவான வசிட்டரை அழைத்து, இராமனுக்கு நல்லுறுதி வாய்ந்த உரைகளைக் கூறுவாயாக என்றான்.

வசிட்ட முனிவன் இராமனை அடைந்து, “ நாளை உனக்கு இந்த நானிலம் ஆளும் உரிமை வழங்கப்பட இருக்கிறது. எனவே நான் ஒன்று கூறுவதுண்டு உறுதிப் பொருள். நன்று கேட்டுக் கடைப்பிடி என்று கூறி அரசன் கைக்கொள்ளவேண்டிய அறங்களை எடுத்துக் கூறுகிறான்.

வசிட்டன் உரைப்பனவாகக் கம்பன் பதினைந்து பாடல்களை இயற்றி உள்ளான்.

தெளிந்த நல்லறம், மனத்தில் செப்பம் உடைமை, கருணை ஆகிய மூன்றையும் ஆள்பவர் கடைப்பிடிக்க வேண்டும் எனக் கூறும் வசிட்டன்,சூது என்பதுதான் அனைத்துக் குற்றங்களுக்கும் மூலகாரணமாகும்; அதை அறவே விலக்க வேண்டும் என்கிறான்.

சூதானது பொருளை அழிக்கும்; பொய் சொல்லத் தூண்டும்; அருளையும் கெடுக்கும்; அல்லவையும் தரும் “ என்ற பொருளைத் தரும் குறளான,

பொருள்கொடுத்துப் பொய்மேற் கொளீஇ அருள்கெடுத்[து]

அல்லல் உழப்பிக்கும் சூது”

என்பது நினைவுக்கு வருகிறது. மேலும், “ஆள்வோர் எவரிடத்தும் பகைமை பாராட்டலாகாது. பகைமை இல்லாத அரசனின் நாட்டில் போர் இல்லாமல் போகும்; அவனது படையும் அழியாது; அவன் புகழ் பெருகும் எனும் கருத்தில் ‘போர் ஒடுங்கும்; புகழ் ஒடுங்காது என்று கூறுகிறான்.

போர் மேகங்கள் சூழ்ந்துள்ள இன்றைய உலக அரசியலுக்கு இது முக்கியமான அறவுரையாகும்.

சிறந்த அரசாட்சி எதுவென்பதற்கு வசிட்டனின் கூற்றாகக் கம்பன் ஓர் இலக்கணம் வகுக்கிறான்.

கோளும் ஐம்பொறியும் குறைய பொருள்
நாளும் கண்டு நடுவுறும் நோன்மையின்
ஆளும் அவ்வரசே அரசு அன்னது
வாளின் மேல்வரும் மாதவம் மைந்தனே”

என்பது கம்பனின் பாடல்.

அதன்படி, “மெய்,வாய், கண்,மூக்கு எனும் ஐம்பொறிகள் உண்டாக்கும் ஆசைகளை அடக்கி, தனது நாட்டுக்குத் தேவையான பொருளை நாள்தோறும் நல்ல வழியில் சேர்த்து, நடுநிலைமையில் நின்று ஆளுகின்ற அரசாட்சியே உண்மையான சிறந்த அரசாட்சியாகும்“ என்பது விளக்கமாகிறது.

இப்படி நடத்துவது என்பது எவ்வளவு கடினமானது என்பதை விளக்க அந்த ஆட்சி வாளின் முனையில் நின்று செய்கின்ற பெரிய தவம் போன்றதாகும் என்ற உவமையும் கம்பனால் கூறப்படுகிறது.

சிறந்த ஆட்சி பற்றி வேதாத்திரியம் சொல்கிறது........

”இலாபமென்ற ஒன்றேதான் தனியார் செய்யும்

எத் தொழிலிலும் உள்ள குறிக்கோள் ஆகும்.

இலாபத்திற்கே மக்கள் உடல் உள்ளத்தை

எந்தஅளவும் கெடுக்கும் கொடுமை யாகும்.

இலாநட்டம் பொதுமக்கள் அனுபவிக்கும்

இன்பதுன்பம் எனகணிக்கும் ஆட்சி காண்போம்.

இலாபத்தில் நட்டத்தில் மனிதர் எல்லாம்

இணைந்தஒரு கூட்டுறவே சிறந்த ஆட்சி." (ஞாக.பா.123)

இன்றைய அரசியலும் ஆட்சியும் சீர்குலைந்து நிற்பதைஉணரும் வேதாத்திரியம், ஒவ்வொரு நாட்டிலும் அரசியல் அமைப்பு

- உரிமைகளைச் செயல்படுத்துவதைத் தீர்மானிப்பதில் இரண்டு அரசியல் கட்சிகள் மட்டுமே போதுமானது.
- அரசியல்வாதி களுக்கும் அரசு நிர்வாகிகளுக்கும் கல்வி போதிக்கும் வகையில் பல்கலைக்கழகங்களில் தனியாக ஒரு துறை இருக்க வேண்டும். ஆன்மீகம், உளவியல், உடலியல், சமூகவியல், பொருளாதாரம் , ஒழுக்கம், பண்பாடு, செயல்விளைவு தத்துவம் இவையனைத்தும் இக்கல்வி முறையில் அமைய வேண்டும்.
- ஒருசில ஆண்டுகளில் இக்கல்வி கற்றவர்கள் மட்டுமே தேர்தலில் நிற்க வேண்டும் என்ற சட்டம் வரவேண்டும்.
- அவர்களுக்குப் பிற வாழ்க்கைத் தொழில் பார்ப்பவர்களைப் போன்று நல்ல ஊதியம் வழங்கப்பட வேண்டும்.
- மேலும் அரசியல் தொடர்புள்ள அவர்களுக்கு வேறு எவ்விதமான தொழிலில் ஈடுபடவும் வாய்ப்பு இருக்கக் கூடாது.

வேதாத்திரியத்தின் இந்த அருமையான கருத்து மக்களால்

ஏற்றுக் கொள்ளப்பட்டு நடைமுறைக்கு வந்தால்

உயர்வானதாக அமையும் என்பதில் ஐயமில்லை.

## ஓர் உலக ஆட்சிஆட்சி

"உலகம் என்ற மண் மீது அனைவரும் பிறந்தோம்

உயிர்காக்கும் ஒன்றே மூச்சு விடுவதற்கு
உலகெங்கும் ஒளிவீசும் சூரியனும் என்றே
உள்ள கடல் ஒன்றே நீர் ஆவியாகிப் பொழிய
உலகில் இன்று உள்ளோர் இதில் ஒன்றும் செய்ததில்லை
ஒவ்வொருவரும் பிறந்து வாழ்ந்து செத்துப் போவார்
உலகில் உள்ளோர் அனைவருமே உடன்பிறந்தோராவார்
ஒத்து உதவி வாழ செயல்விளைவு நீதி தேர்வோம்"

வேதாத்திரியத்தின் இப்பார்வை உலகம் முழுவதையும் சேர்த்தே காணுமளவிற்கு விரிந்தே இருக்கின்றது.

- "இயந்திர, விஞ்ஞான, உலக மக்கள் எண்ணிக்கை இவை மிகுந்த இக்காலத்தில் அந்தந்த நாட்டவர் தம் எல்லை காக்க, அடுத்த நாட்டைத் தாக்க, சேனை வைத்து எந்தச் சமயத்திலுமே பயந்து கொண்டே இருப்பதெனில் மனிதரது வாழ்வென்னாகும்? இந்த நிலையை மாற்றி அறத்தைக் காக்க ஏற்படுத்த வேண்டும் ஓர் உலக ஆட்சி"

என்கிறார் வேதாத்திரி மகரிஷி. அந்த ஆட்சியும் குடியாட்சி முறையாக இருக்க வேண்டும் என்கிறார்.

"குடியாட்சி முறை உயர்வாய்க் கொண்ட அறிஞர் ஒரு
குடியாட்சி பிற நாட்டைக் கொடுமை செய அனுமதியார்
குடியாட்சி பிற நாட்டால் குலைய விடாத ஓர் உலகக்
குடியாட்சி அமைப்பதிலே குறிப்பாகத் தொண்டு செய்வர்" (ஞாக.பா.)

இவ்வாறு ஆட்சி அமைந்தால்,

"பார் முழுதும் ஏழ்மை போம் ; பண்பாடு சிறந்தோங்கும்;

சீர்திருத்த வாழ்வு அப்போ சித்திக்கும் சிந்திப்பீர்." (ஞாக.பா.)

மேலும்,

- உலக ஆட்சியின் கீழ் அகில உலகப் பேரறிஞர்களைக் கொண்ட ஒரு தொண்டு நிலையம் அமைக்கப்படும்.
- அது அவ்வப்போது மனித இன வாழ்வின் உயர்வுக்கான திட்டங்களை வகுத்துக் கொடுக்கவும் மக்களுக்குத் தொண்டாற்றவும் ஒரு பொது சமுதாய சீர்திருத்த இணைப்பு நிலையமாகப் பணி ஆற்றும்.
- ஆன்மீகம், பொருளாதாரம், சுகாதாரம், விஞ்ஞானம், அரசியல் என்ற ஐந்து வகையையும் இணைத்து அறிஞர்களும் நிபுணர்களும் கூடிய ஆராய்ச்சிக் குழுவினரால் மக்கள் வாழ்வை அவ்வப்போது சீர்திருத்த, ஏற்றபடி வழிகளை வகுத்துக்காட்டும்

என்கிறது வேதாத்திரியம். வேதாத்திரியத்தின் கனவு நினவானால் உலகமெங்கும் இன்பமயம்.

முடிவுரை

கம்பரும் வேதாத்திரியமும் தங்க ளடைய அரசியல் பார்வையாக நாம் பாாக்கும்பொழுது. அவர்கள் அரசியல் பற்றி மிகத் தீவீரமாகவம், ஆழமாகவும் சிந்தித்து இருக்கிறார்கள் என்பதை உணர்த்துகிறது.

முடியாட்சி காலத்தில் கம்பர் வாழ்ந்திருந்தாலும் அந்த ஆட்சி முறையை ஏற்காதவராகவே கம்பனைக் காணமுடிகிறது.

முடியாட்சியின் தீமைகளை கோடிட்டுக் காட்டுவதோடு அவற்றை நீக்கவும் முற்படுகிறாா்.

ஒரு நல்லரச பற்றி மட்டும் அல்லாமல் இலட்சிய அரசு எவ்வாறு அமைய வேண்டும் என்பதையும் இருவரும் பட்டியல் இட்டிருக்கிறார்கள்.

எல்லாரும் எல்லாம் பெற்றிருக்க வேண்டும். ஏற்றத் தாழ்வற்ற சமூகம், பெண்களின் முன்னேற்றம், பிறப்பால் உயர்ந்தோர் தா

ழந்தோர் என்று பேதையை அற்று இருந்தல். எனும் கருத்துகள் இருவரிடமும் இருப்பதைப் பார்க்கிறோம்.

பிற்போக்கான கருத்துகளை எல்லாம் எதிர்க்கும் மனம் இருவர்களிடம் காணப்படுகிறது.

மேனாட்டு அறிஞர்கள் கண்டறிந்த பல அரிய உண்மைகைள் கம்பன் ஒன்பதாம் நூற்றாண்டிலேயே சொல்லியிருப்பது வியப்பை அளிக்கிறது.

கார்ல் மார்ச்சின் புரட்சிகரமானத் தத்துவத்தில் காணப்படும் பொதுவடைமை, அரசற்ற சமூகம் போன்ற கருத்துகளின் மூல வடிவத்தை அப்பொழுதே கம்பன் உணர்த்தியிருப்பது, கம்பனது மேதைமையைக் காட்டுகிறது.

ஆக, கம்பர் மற்றும் வேதாத்திரிய அரசியல் கோட்பாட்டுப் பார்வையைத் தமிழ் சமூகத்தில் போற்றுதலுக்கரிய ஒன்றாகவே நாம் காண வேண்டியுள்ளது.

## துணைநின்ற நூல்கள்


கம்பராமாயணம், சுவாமி சித்பவானந்தர்.

கம்பராமாயணம், வ.சுப.மாணிக்கம்

இணையதள தகவல்கள்

ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிஷி

# கம்பனும் வேதாத்திரியமும்

## நாடும் அரசும்




பானுகுமார் படைப்புலகம்

# கம்பனும் வேதாத்திரியமும் இறைச்சிந்தனைகள்

கடவுள் உண்டா? மனித குலம் தோன்றிய காலம் தொட்டு விடைதேடி வரும் கேள்வி இது!

விடை உறுதியாக கிடைக்காது என்ற போதிலும் தேடுகிற ஆர்வம் எந்த காலத்திலும் குறைந்தபாடில்லை!

பரதகண்டம் முழுவதிலும் பக்தி இயக்கத்தை படைநடத்தி கொண்டு சென்ற பெருமை நம் தென்னகத்துக்கு உரியது.

பல்லவர் காலத்திலேயே அதற்கு பிள்ளையார் சுழி போட்டாலும் தெற்காசியா முழுமையும் ஒருகுடை நிழலில் ஆண்ட சோழர்களின் காலத்தில்தான் அது விஸ்வரூபம் எடுத்தது!

